திண்டுக்கல்லிலிருந்து 70 கிலோ மீட்டர் தூரத்திலே தான் உள்ளது. அங்கே ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் கேஸஸ் எவ்வளவு என்று பார்த்தபோது பரீட்சார்த்தமாக ஒரு மாதத்திலே 137 கேஸ்கள் தான் வந்திருக்கின்றன, 137 cases were registered for admission during the month of December 1980. அந்த 137 கேஸ்களிலே கூட மருத்துவமனையிலேயே அனுமதிக்கப் படவேண்டி உள்ளவர்கள் 20, 25 பேர்கள் தான் ஆகவே 20 படுக்கைகளைக் கொண்ட அந்த டி.பி. மருத்துவமனை போதும் என்று கருதுகிறேன்.

போக்குவரத்து ஊழியர்களுக்கான பங்குத் திட்டம்.

*வினா எண் 542—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பங்குத் திட்டம் என்கிற பெயரால் போக்குவரத்து ஊழியர்களிடம் இருந்து 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் வசூலிக் கப்பட்டது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை ஊழியர்களுக்கு திருப்பி வழங்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *(அ)* ஆம்.

(ஆ) நிர்வாகத்திலும்—முதலிலும் தொழிலாளர்களுக்குப் பங்கு என்ற திட்டத்தின் கீழ், போக்குவரத்துக் கழக தொழிலா ளர்களிடமிருந்து வசூலித்த பணத்தை அவர்களிடமே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்ற கருத்துரு அரசின் துரித பரி சீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : எந்த எந்த போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களிடமிருந்து கன்சன்ட் இல்லாமல் எத்தனை நபர்களிடமிருந்து பங்குத் தொகை பிடிக்கப்பட் டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்கு வரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்-பெருநகர்), பாண்டியன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரி யார் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஆகிய போக்குவரத்துக் கழகங்களிலே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அனுமதியில்லா மல் பிடித்திருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை. அரசாங்கம் எந்தத் திட்டத்தையும் கொண்டு வருகிறபோது அந்தத் திட் டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 28]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : கன்சன்ட் இல்லாமல் பிடிக்கப் பட்டிருக்கிறது என்ற விஷயத்தை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? அப்படி பிடிக்கப்பட்டது எந்தக் காலத்திற்குள் திருப்பிக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல முடியுமா? தொழிலாளர் வேஜஸ் சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடந்த சமயத்தில் இதை பற்றி பரிசீலனை செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியது ஞாபகம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எந்தத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தாலும் தனித் தனியாக ஒவ்வொரு வரிடத்திலே ஒப்புதல் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஒட்டுமொத்தமாக எல்லா போக்குவரத்துக் கழகங்களிலேயும் ஒத்துக்கொள்வார்கள் என்ற அடிப்படையிலே கொண்டு வரப் பட்டது. திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னது ஞாபகத்தில் இருக்கிறது. ஞாபகத்திலே இருப்பதால் தான் அது பரிசீலனையில் இருக்கிறது. வெகு விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, இந்தப் பங்கு பெறும் திட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது? தொழி லாளரிடமிருந்து எவ்வளவு தொகை பெறப்பட்டது? அதற்கு வட்டி உண்டா? அதை தொழிலாளர்கள் விரும்புகிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா? எவ்வளவு தொகை வசூலிக்கப்பட் டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாளன்று இந்தத் திட்டம் கொண்டு வரப்பட் டிருக்கிறது. இந்தத் திட்டம் பொதுவாக தொழிலாளர்களுக்கு நல்ல திட்டமாக இருக்கும் என்றுதான் கொண்டு வரப்பட்டிருக் கிறது. ஆனால் அப்பொழுதே எதிர்ப்பு இருந்திருக்கிறது. ஒரு சாரார் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஒரு சாரார் வேண்டாமென்று கோரியிருக்கிறார்கள். இன்றும் கூட அந்த நிலைதான் தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. இதில் வட்டி 8 சதவீதமாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த அரசு பொறுப்பை ஏற்றதற்குப் பின்னர் 12 சதவீதமாகக் கொடுப் பதற்கு உயர்த்தி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும் பொழுது அந்தக் கழகங்களே இப்படித் தொழிலாளர் களிடத்தில் டெபாசிட் வாங்குவது என்றவொரு திட்டமே வைத்து அவர்கள் செய்ததால் கன்சென்ட் தேவையில்லை என்று சொன்னார்கள். விஷயம் அப்படி அல்ல. தொழிலாளர்கள், அங்கே வேலைக்குச் சேர வேண்டுமென்றாலே இந்தப் பணம்

கொடுக்காமல் அவர்களுக்கு வேலை கிடைக்காது என்ற நிலை. ஆகவே, நிர்ப்பந்தமாக வசூலிக்கப்படுகிறது என்பதுதான் அர்த்தம். அந்த நிலையைக் கைவிட்டு, இதுவரைக்கும் வசூலித்த அந்தப் பணம் முழுவதையும் திருப்பிக் கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய கருத்து புதிதாக சேர்பவர்களுக்கு வேண்டுமானால் பொருந்தும். ஆனால் ஏற்கனவே இருந்தவர்கள் கூட அதிலே கொடுத்து இருக்கிறார்கள். அவர்களை எப்படி நிர்ப்பந்தப்படுத்தினார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தத் திட்டத்தை அப்பொழுது அமலாக்கியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது இருக்கின்ற தொழிலாளர்கள் இதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று பெரும்பாலோர் கேட்டுக் கொண்டிருப்பதால் அரசாங்கம் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடனேயே, நிச்சயமாக அதனுடைய முடிவு அறிவிக்கப்படும்.

வயது வரம்பு விதிகளிலிருந்து விதவைகளுக்கு விதி விலக்களித்தல்.

*வினா எண் 543— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி, செவிலியர் பயிற்சி, அரசுப் பணி ஆகியவைகளில் சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :— செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, செவிலியர் பயிற்சி அரசுப் பணி ஆகியவைகளில் சேர இருக்கும் வயது வரம்பு விதிகளில் இருந்து விதவைகளுக்கு விதிவிலக்கு அளிப்பது பற்றி பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அந்தச் செயற் குறிப்பின் மீது நடவடிக்கை எடுக்கும் போது அரசு ஊழியர்கள் இறந்து விட்டால் அந்த விதவைகள் வாங்குவதைப் போல, ஒவ்வொருவரும் தனித்த முறையில் அரசாங்கத்திலிருந்து எக்செம்ஷன் வாங்க வேண்டுமென்ற நிலையை மாற்றி மொத்தமாக விதி விலக்கு அளித்து, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, செவிலியர் பயிற்சி